Registered as a News Paper  பக்கங்கள் 04  விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  புரட்டாதி 26  (12-10-1992)  திங்கட்கிழமை  ஓசை 237

## இப்பில், இப்பில் மரங்கள் வரட்சிக்குக் காரணமா?

''மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் கடந்த கால் நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இவ்வருடம் ஏற்பட்டகொடிய வரட்சிக்குக் காரணம் 1978-ம் ஆண்டு வீசிய சூறாவளியின் பின்னர் வளவுகளிலும், வனங்களிலும் நடப்பட்ட 'றொக்ஸ்' இப்பில் இப்பில் போன்ற குறுகிய காலத்தில் பெருவளர்ச்சியடையும் மரங்களேயாகும்'' இவ்வாறு நீர்வாழ்விலங்கியலாளரும், நீர்த்தாவரவியலாளருமான ரி. பூபாலப்பிள்ளை தமது ஆராய்ச்சியின் பின்னர் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டம் பெரும்பாலும் மணற்பரப்பையும், சதுப்பு நிலங்களையும், ஓங்கிவளர்ந்த பயன்தரும் விருட்சங்களையும் கொண்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

### தலைமைப்பீட அதிகார மாற்றம்

# ராணுவத்திற்குள் முரண்பாடு தீவிரமாகும்:

# போர் நடவடிக்கைகள் பாதிப்படையும்



பாட்டாளி மக்கள் கட்சியினால் சென்னையில் நடாத்தப்பட்ட தமிழர் வாழ்வுரிமை மாநாட்டுப் பேரணியில் தமிழினத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் உருவப்படம் எடுத்துச் செல்லப்படுவதையும் ஊர்வலத்தில் செல்பவர்கள் தலைவரின் படத்துடன் கூடிய பட்டியை தலையில் அணிந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## கிழக்கு பல். கலை பட்டமளிப்பு

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்புவிழா இம்மாதம் இருபத்துநான்காம் திகதி மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. கல்லூரியின் சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெறும் இவ் விழாவில் தொண்ணூற்றிநான்கு பேருக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

## ஒரு டசின் தீப்பெட்டி எடுத்துவர அனுமதி

(வவுனியா)

தாண்டிக்குளம் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் ஒரு டசின் தீப்பெட்டிகள் கொண்டு செல்ல தடைமுகாமிலுள்ள படையினர் அனுமதித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழீழ மீட்பு நிதி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவினரின் தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு நேர அட்டவணை நாளைய ஈழநாதம் இதழில் வெளிவரும்

## சிங்கள விமர்சகர்கள் கருத்து

[கொழும்பு]

கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடம் மீண்டும் அதிகாரங்களைக் கையளித்திருப்பதானது, இராணுவத்திற்குள் ஏற்கனவே நிலவும் முரண்பாட்டைத் தீவிரமடையச்செய்யும் அதேவேளை, வடக்கு-கிழக்குப் போர் நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படையலாம் என சிங்கள அரசியல், இராணுவ விமர்சகர்கள் கருதுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன

சிறிலங்கா இராணுவத்தின் உயர் பீடத்தில் நிலவும் ஒற்றுமையீனம் இவ்வருட ஆரம்பத்திலேயே வெளிப்படையாக தெரியவந்ததாயும், தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் உயர் அதிகாரிகள் மட்டத்தில் முரண்பாட்டைத் தீவிரமாக்குவதோடு, இராணுவத்திற்குள் குழப்பத்தையும் ஒழுங்கீனத்தையும் ஏற்படுத்தும எனவும் சிங்கள விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

ஏற்கனவே வடக்குக்-கிழக்கு போர் முனையில், தொடர்ந்துவரும் தோல்விகளாலும் இழப்புக்களினாலும் மிகவும் நொந்து போயுள்ள சிங்கள இராணுவத்தினருக்கு இடையில் உயர்மட்டத்தில் ஏற்படும் அதிகாரப் போட்டி மேலும் அவர்களின் மனோநிலையைப் பாதிக்கும் என்றும் இதனால் இராணுவத்தில் இருந்து விலகும் தொகையும் அதிகரிக்கலாம் எனவும் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக வடக்கு-கிழக்கு போர் நடவடிக்கைகள் பாதிப்படையும் என்றும் போர் முனைகளில் மேலும் பல பின்னடைவுகள் ஏற்படலாம் எனவும் அவ் விமர்சகர்கள் கருதுவதாக செய்திகள் மேலும் தெரிவித்தன.

## உடன் அதிகாரங்களை கைமாற்ற பிரேமதாசா பணிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ... கட்டுப்பாட்டு கூட்டுப்படைத் ... அமைப்பான தலைமை ... வேளையில் புலிகளுடனான போரில் மாதமொன்றுக்கு

## 'பிரபாகரனே தமிழர் தலைவன்'



பாட்டாளி மக்கள் கட்சியினால் சென்னையில் நடாத்தப்பட்ட தமிழர் வாழ்வுரிமை மாநாட்டுப் பேரணியில் தமிழினத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் உருவப்படம் எடுத்துச் செல்லப் படுவதையும் ஊர்வலத்தில் செல்பவர்கள் தலைவரின் படத்துடன் கூடிய பட்டியை தலையில் அணிந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# 'பிரபாகரனே தமிழர் தலைவன்' 'ஈழப்போராளி தனு ஒரு தியாகி'

## தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் கோஷம்

(சென்னை)

''பிரபாகரனே தமிழர்களின் தலைவன்'', ஈழப் போராளி தனு ஒரு தியாகி'', ஜெயலலிதா உலகத் தமிழரின் துரோகி'' இவ்வாறு அண்மையில் சென்னையில் நடைபெற்ற தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் கலந்துகொண்ட மக்கள் கோஷங்கள் எழுப்பினர்

இம்மாநாட்டிற்கு முன்னர் இடம்பெற்ற பிரமாண்டமான ஊர்வலத்தில் கலந்து கொண்ட பல நூற்றுக்கணக்கானோர் தலைவர் பிரபாகரனை வாழ்த்தும் அட்டைகளை ஏந்திவந்தனர். இதே வேளை மாநாட்டு கூட்டத்தில் தலைவர் பிரபாகரனின் பெயர் உச்சரிக்கப்பட்ட போதெல்லாம் மக்கள் கை தட்டி ஆரவாரம் செய்தனர்

இக்கூட்டத்தில் பேசிய முன்னாள் மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் புலிகளைத் துன்புறுத்தும் பிராமண சக்திகள் நசுக்கப்பட வேண்டும் என்றார்.

இக் கூட்டத்தில் பேசிய பாட்டாளி மக்கள்கட்சித்தலைவர் ராம்தாஸ், இலங்கையில் ஒரு இனத்தின் உரிமைக்காகப் போராட பிரபாகரனின் கெரில்லாப் படையினால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காணாமல்போன 14,000 பேர்பற்றி ஐ.நா. செயற்குழுவிடம் முறைப்பாடு

(கொழும்பு)

சுமார் 14,000 பேர் வரையில் காணமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழுவிடம் கையளிக்கப் பட்டுள்ளன.

கொழும்பு ஹல்ஸ்டோர்ப் வளாகத்தில் தம்மைச் சந்தித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் செயற் குழுவின் பிரதிநிதிகளிடம் சட்டமா அதிபர் திலக் மாரப்பன இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் செயற்குழுவின் பிரதிநிதிகள் பத்திரிகையாளர் றிச்சர்ட் டி செய்சா சட்டத்தரணி லியனாராச்சி போல்றோரின் கொலைகள் தொடர்பான வழக்கில் சட்டமா அதிபரினதும் அவரது திணைக்களத்தினதும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர்.

## சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதிகள் வருகை

அம்னெஸ்டி இன்டர்நாஷனல் எனப்படும் சர்வதேச அமையஸ்தாபனத்தைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் இம்மாதம் 21-ம் திகதியளவில் கொழும்புக்கு வரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிலங்காவில் மனித உரிமைகள் பற்றி ஆய்வு நடத்தும் எலிசாபத் நிசான் மற்றும் அம்னெஸ்டி இன்டர் நாஷனலின் ஆசியத் திணைக்களத்தைச் சேர்ந்த இங்கிரிட் மெஸோர்ஜ் ஆகியோரே இந்த விஜயத்தை மேற்கொள்ள உள்ளோராவர்.

காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட செயலணிக் குழு மந்த கதியிலேயே செயற்பட்டு வருவதாக அம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலிய தூதுவர் மட்டக்களப்பு விஜயம்

இலங்கையில் உள்ள அவுஸ்திரேலிய தூதுவர் நாளை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்ய உள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

வெளிநாடுகளில் தங்கிஉள்ள அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை குறித்து அவதானிப்பதற்காகவே தூதுவர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்வதாகவும் அறியப்படுகிறது.

---

...சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெறும் இவ் விழாவில் தொண்ணூற்றிநான்கு பேருக்கு பட்டங்கள் வழங்கப் படவுள்ளன.

## ஒரு டசின் தீப்பெட்டி எடுத்துவர அனுமதி

(வவுனியா)

தாண்டிக்குளம் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் ஒரு டசின் தீப்பெட்டிகள் கொண்டு செல்ல தடை முகாமிலுள்ள படையினர் அனுமதித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழீழ மீட்பு நிதி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவினரின் தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு நேர அட்டவணை நாளைய ஈழநாதம் இதழில் வெளிவரும் என அறியத்தருகின்றோம்.

## 2ம் லெப்.மாலதியின் உருவப்படம் திரைநீக்கம்

(வடமராட்சிகிழக்கு)

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் முதன் முதல் வீரச்சாவெய்திய 2ஆம் லெப் மாலதியின் பெண்போராளி உருவப்படம் நேற்று முன் தினம் மாலை ஆறு மணிக்கு வடமராட்சியில் மாலு சந்தியில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

2 ஆம் லெப். மாலதியின் 5 ஆம் ஆண்டு நினைவு தினமான அன்றைய தினம் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திரு. யோகரெட்ணம் யோகியினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிலைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சேற்றுக்குள் புதைந்து கிடந்த அம்மன் சிலைகள் வீதியால் சென்ற இளைஞர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டது. சென்ற வியாழக்கிழமை கோப்பாய் - கைதடி வீதியில் கோப்பாய் பாலத்திற்கு அருகில் நாவற்குழி 'லவனிதா' குடியிருப்பில் வசிக்கும் சி. தவராசா என்பவரால் மேற்படி சிலைகள். கண்டெடுக்கப்பட்டன. சூலாயுதம் தாங்கிய பத்திரகாளி அம்மன் சிலை, கன்னிமார் சிலை, வைரவர் சூலம், வேலாயுதம், மூன்று சங்குகள் என்பவற்றுடன் பிறேம் செய்யப்பட்ட சரஸ்வதி படம் ஆகியவையே கண்டெடுக்கப்பட்டவை ஆகும்.

இவை தற்போது நாவற்குழி 'லவனிதா' குடியிருப்பில் உள்ள ஞானவைரவர் ஆலயத்தில் வைக்கப்பட்டு குடியிருப்பு மக்களால் பூசிக்கப் படுகின்றன. [22]

---

...என சிங்கள அரசியல், இராணுவ விமர்சகர்கள் கருதுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன

சிறிலங்கா இராணுவத்தின் உயர் பீடத்தில் நிலவும் ஒற்றுமையீனம் இவ்வருட ஆரம்பத்திலேயே வெளிப்படையாக தெரியவந்ததாயும், தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் உயர் அதிகாரிகள் மட்டத்தில் முரண்பாட்டைத் தீவிரமாக்குவதோடு, இராணுவத்திற்குள் குழப்பத்தையும் ஒழுங்கீனத்தையும் ஏற்படுத்தும எனவும் சிங்கள விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

ஏற்கனவே வடக்குக்-கிழக்கு போர் முனையில், தொடர்ந்துவரும் தோல்விகளாலும் இழப்புக்களினாலும் மிகவும் நொந்து போயுள்ள சிங்கள இராணுவத்தினருக்கு இடையில் உயர்மட்டத்தில் ஏற்படும் அதிகாரப் போட்டி மேலும் அவர்களின் மனோநிலையைப் பாதிக்கும் என்றும் இதனால் இராணுவத்தில் இருந்து விலகும் தொகையும் அதிகரிக்கலாம் எனவும் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக வடக்கு -கிழக்கு போர் நடவடிக்கைகள் பாதிப்படையும் என்றும் போர் முனைகளில் மேலும் பல பின்னடைவுகள் ஏற்படலாம் எனவும் அவ் விமர்சகர்கள் கருதுவதாக செய்திகள் மேலும் தெரிவித்தன.

# உடன் அதிகாரங்களை கைமாற்ற பிரேமதாசா பணிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இராணுவ தலைமைப் பீடத்தில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் என அறிவித்துள்ளார் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுடன் நடாத்திவரும் சண்டையில் கடந்த ஆறு மாதங்களில் சுமார் 800 படையினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்துஇந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என பி.பி.சியின் கொழும்பு முகவர் சுவாக்காநோஸ் எழுதியுள்ள செய்தி ஆய்வுரைக்கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரை மத்திய கட்டுப்பாட்டு அமைப்பான கூட்டுப்படைத் தலைமையகத்தின் கீழ் மீண்டும் கொண்டுவர ஜனாதிபதி பிரேமதாசா தீர்மானித்துள்ளார். இராணுவத்தைப் பொறுத்தவரைகடந்த ஆறு மாத காலங்களும் ஒரு கடினமான காலமாக இருந்துள்ளது. புலிகளுக்கு எதிரான போரில் தமது கை ஓங்கிவருவதாக இராணுவத் தளபதிகள் கூறிவரும் வேளையில் புலிகளுடனான போரில் மாதமொன்றுக்கு குறைந்தது 100 படையினர் வரை பலியாகி வந்துள்ளனர்.

இந்த ஆண்டு இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கையிலும் புலிகளால் வழிமடக்கி தாக்கப்பட்டு கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகம், இது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களை பிடிக்க இராணுவம் முயற்சி

பூநகரி - பூவரசந்தீவு பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை சிறிலங்கா இராணுவத்தினர் பிடிக்க முயற்சித்த வேளை அவர்கள் கடலில் பாய்ந்து தப்பித்து வந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது

மீனவர்கள் சென்ற வள்ளமும், தொழில் உபகரணங்களும் இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குருநகர் பகுதியைச் சேர்ந்த மீனவர்களே இராணுவத்தினரிடம் அகப்படாமல் தப்பி வந்தவர்களாவர். (21)

## பாடசாலை உபகரணங்கள் எடுத்துவர அரசு தடை

பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்களை வட பகுதிக்கு எடுத்து வருவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அரசு புதிய தடைகளை விதித்துள்ளது.

வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிகப்பட்டு அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென ''யுனிசெவ்'' நிறுவனம் ஒரு தொகுதி பாடசாலை உபகரணங்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு முயற்சி செய்தது.

பென்சில் சீவும் கட்டர், சித்திரம் வரையும் கலர்சாக், போன்றவற்றிற்கே தடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கட்சித் தலைமையை கைப்பற்ற அனுரா முனைப்புடன் செயற்பாடு

## -விக்டர் ஐவன்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்க கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றுவதில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறார் என விக்டர் ஐவன் பி. பி. சிக்கு தொலைபேசிமூலம் தெரிவித்தார்.

மகனின் இந்த வேகமான வளர்ச்சி சிறிமாவோபண்டாரநாயக்காவிற்கு மகிழ்ச்சிதரக் கூடிய ஒன்றல்ல ஆனால் அவர் என்ன செய்யப்போகிறார் மகனுக்கு இடம்விட்டு கட்சித் தலைமைப் பதவியை விட்டுவிடப் போகிறாரா? அல்லது இது ஒரு பெரிய உட்கட்சிப் பிரச்சினையாக உருவெடுக்குமா? அல்லது இருபிரிவினரும்உடன்பாடுஒன்றை நோக்கிச் செல்லப்போகின்றனரா?

ஏனைய எதிர்க் கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உள் நடைபெறும் பிரச்சினையை அவதானித்துக் கொண்டுள்ளனர். இது எவ்விதமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என சிந்தித்த வண்ணம் உள்ளனர்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

**நம் நலம் காக்க**
**நமக்கொருமரம்நாட்டிருவீர்**

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்கு உண்டு
**HIGH LINE PRIMA, BHIRA**

கைலைன் வெள்ளை, சறுட்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறோயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (3325)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582, Stanley Road Jaffna. (சி 5169)

### தரன் ஸ்ருடியோ

குறைந்த சலார் - குறித்த நேரம் - தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92-27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலைகட்கு 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3334)

### துரித மீட்டற்பயிற்சி

துரித மீட்டற்பயிற்சி (ஆண்டு 5 புலமைப் பரிசில் வெளிவந்து விட்டது) புதிய கல்வி நிலையத்தால் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய வெளியிடப்பட்ட ஆண்டு 5 புலமைப்பரிசில் துரித மீட்டற் பயிற்சி (15 வினாத்தாள்கள் விடைகளுடன்) ஆண்டு 6 அநுமதிப் பரீட்சைக்கும் ஏற்றது. புதிய கல்வி நிலையத்திலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (3452)

### இலக்கிய விழா
(கொழும்புத்துறை)

## சுதந்திரக் கட்சியிலிருந்து மிதவாதிகள் வெளியேற்றம்?

சுதந்திரக் கட்சியிலிருந்து மிதவாதிகள் பலர் வெளியேறலாம் என்று தெரிய வருகின்றது.

கட்சியின் வாலிப முன்னணிக்கான தேர்தல்கள் அண்மையில் நடைபெற்றபோது களோபாம் நடந்ததாகவும் அதையடுத்து கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் மிதவாதிகள் பலரும் கட்சியின் இறுதிக் காலம் அண்மித்து விட்டதாக கருதுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அறிவித்தல்

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

எமது நிர்வாக சபை ஏகமனதாக தலைவர் எஸ் சிவபாதம் அவர்களை [சர்மிளாபாமசி] 1992-10-10 லிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதை சகல அங்கத்தவருக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாக சபை உறுப்பினர்

(3348)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீரப் பிறப்பு: | வீரச் சாவு: |
|---|---|
| 11 | 26 |
| 10 | 09 |
| 1962 | 1988 |

முன்னாள் திருமலை மாவட்டத் தளபதி

**மேஜர் சுரேந்திரன்** [சிங்களவன்]

[காளிராசா சிறீபாஸ்கரன்]

3-ம் கட்டை, உப்புவெளி திருமலை

திதி:- 12-10-1992

தளபதியை மறப்போமா?

தலைநகரிற் சிங்களத்தின் கொடி பறக்கவோ?
தமிழீழப் புலி படை நாம் பொறுத்திருக்கவோ?
கொலைவாளைக் கொண்ட அரிக் கொடி துலங்கவோ?
கும்பிட்டுத் தமிழர் நாம் அதை வணங்கவோ?
அலையலையாய் எழு படைக்கு அஞ்சி மாளவோ?
அன்னியர்க்குக் காவடி பிடித்துக் கெஞ்சி வாழவோ?
தலை கொடுத்தும் திருமலையை காப்போம் என்று போர்
தனைத் தொடுத்த தளபதியை நாம் மறப்பமே ?
சிங்களத்து ஆரியர்க்குத் தோள் கொடுக்கவே!
தேடிவந்த இந்தியக்கூட்டம் எமை அழிக்கவோ?
பொங்கி எழு புலிப்படைஞர் இதை பொறுக்கவோ?
புதைகுழிக்குள் எமையொழித்து அவர் சிரிக்கவோ?
என்று கேட்டுச் சிலிர்ப்பினோடு நீ எழுந்தவன்!
இடி புயலாய்க் களம்புகுந்து அடி கொடுத்தவன்!
இன்று ஈழ மக்கள் நெஞ்சில் நீ நிறைந்தவன்!
எங்கள் 'மேஜர் சுரேந்திரனை'' நாம் மறப்பமோ?

திருமலைத் தொடர்பகம், கொக்குவில்.

(சி-5210)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**2-ம் லெப்டினன்ட் சாள்ஸ்**

[பூபாலசிங்கம் சந்திரகுமார் (தயா)]

| | |
|---|---|
| மண்ணிற்காய் மக்களை தரிசித்தது | மக்களிற்காய் மண்ணில் விதையானது |
| 20 06-1965 | 12-10-1987 |

தேசத்தை நேசித்த குற்றத்திற்காய்
தேகத்தைத் தொலைத்திட்ட எம்
இனிய புதல்வனே !
எம் நெஞ்சில் பாயவிருந்த குண்டுகளை
தடுத்திட நீ துடித்தாய் — உன் நெஞ்சில்
குண்டுபாய்ந்த வேளையில் நாமங்கில்லையடா
தாயகமாம் தமிழ்ஈழம் தரணியிலே உருவாகும்
காலமது தொலைவில் இல்லை.

உமது ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
அன்பு அப்பா, அம்மா,
சகோதரர்கள், உறவினர்கள்,

'சாள்ஸ் வீதி'
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(சி/5102)

## சப்தகி அப்த பூர்த்தி அழைப்பு



புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவில் பிரதம குருக்களும், ஆதீன கர்த்தாவும் ஆகிய சிவஸ்ரீ மா. மீனாட்சி சுந்தரக் குருக்களுக்கும் அவர்தம் பாரியாருக்கும் சேலவ நலன் பாராட்டி, சாந்தி ஹோமமும் பாராட்டு விழாவும் நாளை 13-10-92 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறும். புங்குடுதீவு மக்களாகிய தங்களுக்கு நேரில் வந்து அறிவிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். இவ் அழைப்பை ஏற்று இவ்விழாவில் கலந்தும் சமாராதனையில் பங்குபற்றியும் அவர்களின் ஆசியையும் பெறும வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**சிவஸ்ரீ. ஸ்ரீநி. நாகேந்திரக் குருக்கள்**
**லோகேஸ்வரி**

(சி/5211)

## நினைவு கூருகின்றோம்... 1992-10-12

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் - உயிலங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**பிறின்ஸ்லி** (பஸ்ரியன் குரூஸ் சகாயநாதன் - அரிப்புத்துறை - மன்னார்)

**யேசுதாஸ்** (தங்கவேல் ராமன் - அரிப்புத்துறை, மன்னார்)

1986ஆம் ஆண்டு மன்னார் - அடம்பன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

மன்னார் மாவட்டத்தளபதி -

**லெப் கேணல் விக்டர்** (மருசலீன் பியூசிலஸ் - பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

**2-ம் லெப். ரோம்** (செல்வராஜா செல்வநாதன் - தாமரைக்குளம, அடம்பன், மன்னார்)

மன்னாரில் சிறிலங்காப்படையினருடனான நேர

முன்னிட்டு 9-10-92-27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலைகட்கு 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3334)

## துரித மீட்டற்பயிற்சி

துரித மீட்டற்பயிற்சி (ஆண்டு 5 புலமைப் பரிசில் வெளிவந்து விட்டது) புதிய கல்வி நிலையத்தால் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய வெளியிடப்பட்ட ஆண்டு 5 புலமைப்பரிசில் துரித மீட்டற் பயிற்சி (15 வினாத்தாள்கள் விடைகளுடன்) ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்கும் ஏற்றது. புதிய கல்வி நிலையத்திலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (3452)

## இலக்கிய விழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இலக்கியவிழா இன்று 12ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு அதிபர் திரு. க. தங்கராசா தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (24)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட திரிசாரணர் குழு நல்லூருக்கான விசேட கூட்டம் இன்று திங்கட்கிழமை (12-10-92) பிற்பகல் 5 மணிக்கு எஸ். பி. மண்டபத்தில் நடைபெறுமென யாழ். மாவட்ட திரிசாரணர் குழு உதவித் தலைவர் திரு. எஸ். பத்மராஜா தெரிவித்தார்.

FACULTY OF ARTS
UNIVERSITY OF JAFFNA

COMMENCEMENT OF
1991 / 1992
ACADEMIC YEAR

The next academic year of the Faculty of Arts would commence on 14th october, 1992.

Lectures for 2nd year, 3rd year and 4th year Arts, Commerce, Management and Ramanathan Academy students (including Special Degree Students) would commence on that date.

Registrar. (சி-5212)

## 2-ம் லெப்டினன்ட் சாள்ஸ்

[பூபாலசிங்கம் சந்திரகுமார் (தயா)]

மண்ணிற்காய்
மக்களை தரிசித்தது
20 06-1965

மக்களிற்காய்
மண்ணில் விதையானது
12-10-1987

தேசத்தை நேசித்த குற்றத்திற்காய்
தேகத்தைத் தொலைத்திட்ட எம்
இனிய புதல்வனே !
எம் நெஞ்சில் பாயவிருந்த குண்டுகளை
தடுத்திட நீ துடித்தாய் — உன் நெஞ்சில்
குண்டுபாய்ந்த வேளையில் நாமங்கிலலையடா
தாயகமாம் தமிழ்ஈழம் தரணியிலே உருவாகும்
காலமது தொலைவில் இல்லை.

'சாள்ஸ் வீதி'
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

உமது ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கும்
அன்பு அப்பா, அம்மா,
சகோதரர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

(சி/5192)




புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவில் பிரதம குருக்களும், ஆதீன கர்த்தாவும் ஆகிய சிவஸ்ரீ மா. மீனாட்சி சுந்தரக் குருக்களுக்கும் அவர்தம் பாரியாருக்கும் சேவை நலன் பாராட்டி, சாந்தி ஹோமமும் பாராட்டு விழாவும் நாளை 13-10-92 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறும். புங்குடுதீவு மக்களாகிய தங்களுக்கு நேரில் வந்து அறிவிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். இவ் அழைப்பை ஏற்று இவ்விழாவில் கலந்தும் சமாராதனையில் பங்கு பற்றியும் அவர்களின் ஆசியையும் பெறும வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவஸ்ரீ. ஸ்ரீநி. நாகேந்திரக் குருக்கள்
லோகேஸ்வரி

(சி/5211)

# 5ஆம் ஆண்டு இதய அஞ்சலி



இளமை நாளின் கனவை எல்லாம்
எருவாய் மண்ணில் புதைத்து விட்டு
எதிரியை விரட்ட வீறு கொண்டாய் அன்று
பல்கலையும் பயிலும் பல்கலைக் கழகத்தில்
புலிப்படையின் போர்க்கலையைஉணர்த்திவிட்டாய்
இந்திய வல்லரசுக்கு -! ஒரு நொடியில் வீழ்ந்தன
சீக்கியத் தலைகள்; சிதைந்தன உடல்கள்.
அகிலா, எம் தாய் மண் காத்திட உன் உயிர்
ஈந்தாய். நீ ஏந்திய துவக்கு வீழ்ந்திடும்
முன்னே புதுக்கரங்கள் அதை ஏந்தின
வெற்றியுடன் முழங்குகின்றன இன்றும் ...

பிறப்பு 11-12-1966

வீரச்சாவு 12-10 1987

அனைத்துப் போராளிகளையும் மதிய போசனத்திற்கு அழைக்கின்றோம்.

## வீரவேங்கை அகிலன்

(க. மகேந்திரன் - அரியாலை)

கணேஸ்
15, அகிலன் வீதி,
அரியாலை

இங்ஙனம்
குடும்பத்தினர்

(3322)

## நினைவு கூருகின்றோம்...
## 1992-10-12

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் - உயிலங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**பிறின்ஸ்லி** (பஸ்ரியன் குரூஸ் சகாயநாதன் - அரிப்புத்துறை - மன்னார்)

**யேசுதாஸ்** (தங்கவேல் ராமன் - அரிப்புத்துறை, மன்னார்)

1986ஆம் ஆண்டு மன்னார் - அடம்பன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

மன்னார் மாவட்டத்தளபதி -

**லெப் கேணல் விக்டர்** (மருசலீன் பியூசிலஸ் - பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

**2-ம் லெப்.ரோம்** (செல்வராஜா செல்வநாதன் - தாமரைக்குளம, அடம்பன், மன்னார்)

மன்னாரில் சிறிலங்காப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

**சந்துரு** [கணபதிப்பிள்ளை சந்திரன் - எருக்கலம்பிட்டி, மன்னார்]

மன்னார் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

★ **இதயம்/ரொனி** [இ. பெனடிக்ற் - காத்தான் குளம், மன்னார்]

★ **சேகர்** [ஜோசப் - ஆலங்கேணி, கிண்ணியா]

1987ஆம் ஆண்டு கோப்பாயில், இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சாள்ஸ்/தயா** [பூபாலசிங்கம் சந்திரகுமார் - மட்டுவில் தெற்கு, யாழ்]

யாழ் - பல்கலைக்கழக வளாகத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பீலிக்ஸ்/மெண்டிஸ்** [ஜீவரட்ணம் குருஸ்ரீபன் - காங்கேசன்துறை வீதி, பலாலி, யாழ்]

**ரஞ்சன்/வேப்பெண்ணெய்** [இராசரத்தினம் இராசவேந்தர் - சுன்னாகம், யாழ்.]

யாழ் பிரம்படியில், இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**அகிலன்** (கணேசன் மகேந்திரன் - 15, அகிலன் வீதி, அரியாலை. யாழ்.)

மல்லாகம், சுன்னாகம், கொல்லங்கலட்டி, பிரம்படிப் பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட குழந்தை, பெண் உட்பட 75-தமிழர்கள்

1988ஆம் ஆண்டு கோப்பாய் பகுதியில் இந்தியப் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

**பிறேமன்** [சோமசுந்தரம் இளங்கோ - சாரதா வீதி, சங்கத்தானை]

கட்டைபறிச்சானில், இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு, பழுகாமம் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு அம்பாறை கோமாரி இடம் பெயர்ந்தோர் முகாமில் படையினரால் கைதாகிக்காணாமல்போன பொத்துவில் - உல்லைப்பகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5206)

## சிந்தனைக்கு

எச்சரிக்கையையே பொருட்படுத்தாமல் இருக்கும் போது மனிதர்கள் அறிவுரையை ஏற்றுக்கொள் வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க இயலும்?

— ஜானந்தன் ஸ்விஃபிட்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 12-10- 1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308

த பெ எண் - 05


## அதிகாரிகளை மாற்றுவதில் பயனேதுமில்லை

வடக்கு - கிழக்கு இராணு நடவடிக்கைகளைத் திட்டமிடும் பொறுப்பு மீண்டும் கூட்டுப் படை நடவடிக்கை தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தொடர்ச்சியான தாக்குதலின் விளைவாக இராணுவத்திற்கு ஏற்பட்ட பெரும் உயிர்ச்சேதமும், பொருள் சேதமுமே இத்திடீர் மாற்றத்திற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதி வெளி வந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதுவரை கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடம் இருந்த அதிகாரங்கள் முப்படைகளின் தளபதிகளிடமும், பொலிஸ் மா அதிபரிடமும் கையளிக்கப்பட்டன. இதன் பிரகாரம் வடக்குக் கிழக்குப் போரை திட்டமிடுவதும் நடத்துவதுமான பொறுப்புக்கள் முப்படைகளின் தளபதிகளிடமும், பொலிஸ் மா அதிபரிடமும் வந்தன.

ஆனால், அதிகாரங்கள் கைமாறினவே ஒழிய போர் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டதாக இல்லை நிலைமை மேலும் மோசமாகியது, ஆயுதப் படைகளுக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம் மிகவும் உயர்வானதாக மாறியது இக்காலப்பகுதிக்குள் ஏற்பட்டது போன்ற உயர்ந்தளவு வீதாசார உயிர் இழப்பும், உயர் அதிகாரிகளின் இழப்பும் இதுவரை சிறிலங்கா ஆயுதப்படைக்கு ஏற்படவில்லை என்பது முக்கியமான விடயம் ஆகும்.

அதேபோன்று, பல கோடி ரூபா ஆயுதங்களையும், சிறிலங்கா இராணுவம் இழந்துள்ளது. இதில் வை - 8 விமானத்தைப் புலிகள் சுட்டு வீழ்த்தியமையும், நீரூந்து விசைப் படகைக் கைப்பற்றியமையும் குறிப்பிடத்தக்கவையாக உள்ள அதே வேளை, ஒக்டோபர் இரண்டாம் திகதி கட்டைக் காட்டில் கைப்பற்றிய பலகோடி பெறுமதியான இராணுவத் தளபாடங்கள் யாவற்றிற்கும் சிகரம்

# லெப். கேணல் விக்டர் பற்றி.........

## ஒரு போராளியின் நாட்குறிப்பிலிருந்து

1.1.1987

இன்று ஜனவரி முதலாம் திகதி என் நண்பனாய், அண்ணனாய், ஆசானாய், தந்தையாய், தளபதியாய் விளங்கிய விக்டரைப் பலிகொண்ட 86 ஆம் ஆண்டு போய்த் தொலைந்து விட்டது. இன்று காலை டேப்பில் கேட்ட அந்தப் பாடலை "நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா?" என்ற வரிகள் என் அழுபனதின் வேதனைகளைக் கிழறிவிட்டது 17. 1. 86 அன்று இடம்பெற்ற நாயாற்று வெளிச்சம்பவமே என் மனதில் திரைப்படம் போல் நிழலாடுகின்றது.

அப்போது மாந்தைச் சந்தியில் நிற்கும் எமது சென்றி பகலில மட்டுமே போடப்படும் அன்றைய தினம் இரவோடிரவாக மாந்தைச் சந்தியைத் தாண்டிய இராணுவத்தினர் இலுப்பைக் கடவைப்பக்கம் சென்றனர் என்றும் சிலரை இடையில் இறக்கிவிட்டு தள்ளாடி முகாமுக்கே திரும்பிச் சென்று விட்டனர் என்றும் எமக்குத்தகவல் கிடைக்கிறது

கிடைத்த தகவலை விக்டரிடம் தெரிவித்த போது உடனடியாக எங்களைப் புறப்பட ஆயத்தமாகுமாறு கூறினார். விக்டரை இராணுவத்தினர் எப்படி எல்லாம் தேடி அலைகின்றார்கள் என்பது எமக்கு நன்றாகவே தெரியும் விக்டர் இந்த விஷப் பரீட்சையில் ஏன்தான் இறங்குகிறாரோ என்று கூட நான நினைத்தேன் ஏனெனில் அந்தப் பிரதேச இயற்கையமைப்புப் பற்றி மன்னாரிலுள்ளவர்களுக்குத்தான் தெரியும் ஒரே வெளி, இடையில் எங்கேயாவது ஓரிரு பற்றைகள் பலமான தாக்குதல் ஒன்றை நாம் மேற்கொள்ளும் போது இராணுவத்தினருக்கு துணையாக உலங்குவானூர்தி வரும் இந்த வெட்டவெளிப் பிரதேசத்தில் நிலைமை எங்களுக்குச் சாதகமாக அமையுமா? என்பது சந்தேகமே விக்ரருக்கு ஏதாவது ஒன்று நடந்து விட்டால் நாளைய வரலாறுஎன்மீதுவசைபாடுமே என்பது போன்ற வினாக்கள் என் உள்ளத்திலெழவே "அண்ணா நீங்கள் போகவேண்டாம் நாங்கள் போகிறோம். நீங்கள் முகாமிலேயே இருங்கள்"



என்று சொன்னோம் அப்போது விக்டர் சொன்ன வார்த்தைகள் "நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் உங்களைப் பலிக்கடாக்களாக்கி விட்டு கேவலம் இந்த உயிரைக் காப்பாற்ற நான் முடங்கிக் கிடப்பதா? எமது பிரதேசத்திற்குள்வர இராணுவத்தினருக்கு என்ன துணிச்சல்? இதற்கு இன்று ஒரு முடிவு கட்டுகிறேன் அனைவரும் புறப்படுங்கள்" என்று சொன்னார். அவ்வளவுதான்... அதன் பின் ஆலோசனைஎன்ற பேச்சுக்கே இடமில்லாமல் ஆணை என்ற ஒன்றுதான் விக்டரின் வாயிலிருந்து வெளி வந்து கொண்டிருந்தது

இப்படியான நேரங்களில் அவரிடம் காண்பதெல்லாம் தளபதிக்கே உரிய மிடுக்கு அப்போதெல்லாம் எங்கள் மத்தியில் ஒரே ஒரு குரல்தான் ஒலிக்கும். அது விக்ரருடையதாகத்தான் இருக்கும்.

எட்டு மணியளவில் எமது முகாமிலிருந்து இரண்டு மோட்டார் சைக்கிளிலும், ஒரு ஜீப்பிலுமாக அனைவரும் புறப்படத்தயாரானோம். அப்போது விக்டர் மோட்டார் சைக்கிளை எடுத்தார் எனக்கு மனம் "திக்" என்றது ஏனெனில் ஜீப்பைப் பின்னே விட்டு மோட்டார் சைக்கிளை பைலட்டாகச் செலுத்திக் கொண்டு போன எங்கள் நண்பன் பீசிஸ் போன்றோரை இதே பாதையில் தான் நாம் இழந்திருந்தோம் அப்படி ஒரு சம்பவம் விக்டர் வாழ்வில் நிகழ்ந்து விடக்கூடாதே கடவுளே! ஏதாவது ஒரு பிரச்சினை என்றாலும் எனது உயிரை எடுத்துக் கொண்டு விடு. விக்டரைத் தமிழீழ மண்ணுக்குத் தந்துவிடு என்றே இச்சமயத்தில் எனது மனம் வலியுறுத்திக் கொண்டிருந்தது. ஆனாலும் விக்டருடன் போவது மாபெரும் பலமாகவும் இன்று ஒரு சாதனையைப் படைக்கப் போகிறோம் என்ற உள்ளுணர்வுடன் விக்டரின் பின்னேஏறிக் கொண்டேன். எனினும் இரண்டு மோட்டார் சைக்கிளும் ஜீப்பும் வந்தால் சாரதியின் பக்கத்தில் விக்டர் இருப்பார் என்ற தகவல் இராணுவத்தினருக்கு கிடைத்திருக்கிறது. எனினும் இச் செய்தி உண்மையா பொய்யா என்பதை சரியாகத் தீர்மானிக்க முடியாமல் இருந்தது

பள்ளமடுச் சந்தியை அடைந்ததும் தமிழ், முஸ்லிம்மக்கள் சிலர் குறிப்பிட்ட தொகை இராணுவத்தினர் திரும்பி வரவில்லை என்பது நிச்சயமாகத் தமக்குத் தெரியும் என்றும் இரவு சென்ற இராணுவத்தினரின் தொகையை விட திரும்பி வந்த இராணுவத்தினரின் தொகை மிகக்குறைவே என்றும் சொன்னார்கள் எம்மைத் தொடர்ந்து செல்ல வேண்டாம் என்று உரிமையுடன் தடுத்தார்கள்.

ஆனாலும் என்ன நடக்கப் போகின்றது என்பது எமக்குத் தெரியும்தானே. விக்டர்முடிவு எடுத்தால் அது இரண்டில் ஒன்று என்பதாகத்தான் இருக்கும். மோட்டார் சைக்கிள் புயலெனப் பறக்கிறது. அடுத்த மோட்டார் சைக்கிளும் ஜீப்பும் எம்மை நெருங்குகின்றன அப்போது பற்றைகளுக்குள் இருந்து இராணுவத்தினரின் வேட்டொலி கேட்கிறது நாங்கள் மோட்டார் சைக்கிளிலிருந்து பாய்ந்து நிலையெடுத்துக் கொள்கிறோம். ஜீப்பைப் பள்ளந்திற்குத் திருப்பிவிட்டு அனைவரையும் நிலையெடுத்துக் கொள்ளுமாறு விக்டர் ஆணையிடுகிறார்.

> லெப். கேணல் விக்டரின் ஆறாவது நினைவு தினம் இன்றாகும். இதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது தளபதிலெப். கேணல்விக்டரைப் பற்றி அவரது மெய்ப் பாதுகாவலர் ஒருவரின் நாட்குறிப்பிலிருந்து......

ஆயினும் கண்ணிமைப் பொழுதில் றோஸ்மன் எங்களை விட்டுப்பிரிந்துவிட்டானென்ற செய்தியும் கிடைக்கின்றது. ஆயினும் அனைவரும் தீரமுடன் போராடுகின்றோம் எனது கையிலிருந்த எம்-16 லேஞ்சர் விக்டரின் கைகளுக்கு மாறுகின்றது. விக்டரின் போர்த்திறமையை என்னவென்று சொல்வது? ஆ... அது ஒருகலை அவருக்கு. எமதுகைவசமிருக்கும் ஆயுதங்களின் ரவைகள் இருப்புமுடிவடைந்துகொண்டு வருகிறது. அடுத்த எமது முகாமுக்குத் தகவல்கொடுக்கலாமென்றால் தண்ணீரில் நனைந்ததால் "வோக்கியும்" ஒழுங்காக வேலைசெய்யவில்லை. ஒருவாறு தகவல் கொடுக்கப்பட்டு விட்டது. தகவல் கிடைத்து அவர்களும்வர 2ஹெலிகொப்ரர்களும் வந்துசேர்ந்தன. வெட்டவெளிப் பிரதேசத்தில் சூழ்நிலை எமக்குப் பாதகமாயிருந்தபோதும்விக்டரின்தலைமையிலான எமது தாக்குதலினால் எமது கையே ஓங்குகின்றது. இராணுவத்தினர் உயிர் பிழைத்தால் போதுமென தலைதெறிக்க ஓடுகின்றனர். அவர்களை நாம் தொடரவிடாமலும், ஜீப்பை நெருங்கவிடாமலும் ஹெலிகொப்ரர் தாக்குதலை நடத்துகின்றது.

இராணுவம் ஹெலிகொப்ரரின் உதவியுடன் ஒருவாறு தப்பிப் பிழைக்கிறது. இறந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் ஹெலிகொப்ரர்கள் ஏற்றிச் செல்கின்றன. களைத்து போய் கால்நடையாகச் சென்ற இராணுவத்தினரும், இவர்களுக்கு உதவியாகத் தள்ளாடியிலிருந்து வந்த இராணுவத்தினரும் மாந்தையில் எமது மற்றொரு குழுவிடம் வாங்கிக் கட்டிக் கொள்கின்றனர்.

அடுத்தநாள் பத்திரிகையில் "ஒரு ஹெலிகொப்ரரைக் காணவில்லை" என்ற செய்தியும், இராணுவத்தரப்பு இழப்புக்களும், நாம் கைப்பற்றிய இராணுவச் சாதனங்களும். ஆயுதங்களும் போராட்டத்தில் எமக்கு மேலதிக நம்பிக்கையைக் கொடுக்கின்றன. ஆனாலும் இந்த வெற்றியை விட ரோஸ்மனின் இழப்புதான் உங்களுக்கு பெரிதாகத் தெரிவதாக தனிமையில் என்னிடம் உங்கள் மனக்குமுறல்களை வெளிப்படுத்தியபோது இப்போராட்டத்தில் பங்கு பற்ற எனக்கு சந்தர்ப்பம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மத்திய அமைச்சரவையில்

## விரைவில் மாற்றங்கள் வரும் பிரதமர் ராவ் அறிவிப்பு

(டில்லி)

இந்திய மத்திய அமைச்சரவையில் விரைவில் மாற்றங்கள் கொண்டுவரப்படும் பல இலாக்காக்களின் பொறுப்புக்

என்றும் குறிப்பிட்டார் ராமஜென்மபூமி மற்றும் பாபர் மசூதி பிரச்சினைக்கு தீர்வு காண தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் நீதி

சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார் கல்கத்தாவில் மேற்கு வங்க முதல்வரும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை

## ஐக்கிய ஜேர்மனியால் அபாயம் ஏற்படலாம்

### தட்சர் எச்சரிக்கை

(நியூயோர்க்)

ஜேர்மனியின் புதியசக்தி தமக்கு அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் மாஸ்ட்ரிச்ட் உடன்பாடு நசுக்கப்படாவிட்டால் பிரித்தானியா தனது பொருளாதார சுதந்திரத்தை இழந்து விடும் என முன்னாள் பிரித்தானிய பிரதமர் மார்க்ரட்

பிட்டுள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பாவில் இருக்கும் வரை ஜேர்மனி சுதந்திரமாக இருக்கும் என நான் கருதவில்லை. ஐக்கிய ஜேர்மனி குறித்து எல்லோரும் சிறிது அச்சம் கொள்ள வேண்டியுள்ளது என்றும்அவர் தெரிவித்தார்.

போரை இட்டமிடுவதும் நடத்துவதுமான பொறுப்புக்கள் முப்படைகளின் தளபதிகளிடமும், பொலிஸ் மா அதிபரிடமும் வந்தன.

ஆனால். அதிகாரங்கள் கைமாறினவே ஒழிய போர் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டதாக இல்லை நிலைமை மேலும் மோசமாகியது. ஆயுதப் படைகளுக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம் மிகவும் உயர்வானதாக மாறியது இக்காலப்பகுதிக்குள் ஏற்பட்டது போன்ற உயர்ந்தளவு வீதாசார உயிர் இழப்பும், உயர் அதிகாரிகளின் இழப்பும் இதுவரை சிறிலங்கா ஆயுதப்படைக்கு ஏற்படவில்லை என்பது முக்கியமான விடயம் ஆகும்.

அதேபோன்று, பல கோடி ரூபா ஆயுதங்களையும், சிறிலங்கா இராணுவம் இழந்துள்ளது. இதில் வை - 8 விமானத்தைப் புலிகள் சுட்டு வீழ்த்தியமையும், நீருந்து விசைப் படகைக் கைப்பற்றியமையும் குறிப்பிடத்தக்கவையாக உள்ள அதே வேளை, ஒக்டோபர் இரண்டாம் திகதி கட்டைக்காட்டில் கைப்பற்றிய பலகோடி பெறுமதியான இராணுவத் தளபாடங்கள் யாவற்றிற்கும் சிகரம் வைத்தது போன்றதாகும்.

இந்நிலையில் தான் மீண்டும் கூட்டுப் படைத் தலைமையகத்திடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன ஆனால், கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் பொறுப்பு வகித்த காலத்தில், இராணுவத்தில் உயிரிழப்புக்களோ அன்றி தளபாட இழப்புக்களோ ஏற்படாமல் இல்லை. ஆனால் ஒப்பீட்டு ரீதியில் சற்றுக்குறை வானதாகும்.

ஆனால் போரில் ஏற்படும் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டவுடன் தளபதிகளை மாற்றுவதாலும் அதிகாரங்களைக் கை மாற்றுவதாலும் வெற்றி பெற்றுவிட முடியாது ஏனெனில் போரின் வெற்றியைத்தனியாகசிறிலங்கா இராணுவத்தளபதிகள்மட்டும் தீர்மானித்து விட முடியாது. எதிர்த்து போரிடும் சக்திகளும் தீர்மானிக்கின்றன என்பதை சிறிலங்கா அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறிலங்கா அரச இராணுவத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்தும் விடுதலைப்புலிகள் உலகநாடுகளில் உள்ள பல்வேறு நாட்டுவிடுதலைப் போராளிகளுக்குள் துணிவும் மன உறுதியும் மிக்கவர்கள் என எதிரியாலேயே பாராட்டப் பெற்றவர்கள் தமது இலட்சியத்திற்காக தமது உயிரையே எந்த வேளையிலும் தற்கொடை செய்யத்தயாராக இருப்பவர்கள். இதே வேளை புலிகளின் தலைமையோ உலகிலுள்ள கெரில்லாத்தலைவர்களுக்குள் செயற்பாடுமிக்க தலைமை எனப் பாராட்டப் பெற்றது. அத்தோடு புலிகளின் அனுபவமோ நீண்டது பிராந்திய வல்லரசுடன் மோதி வெற்றிகாணும் அளவில் பலம் மிக்கது. புலிகள் கடைப்பிடிக்கும் யுத்த தந்திரோபாயங்களோ உலகில் கடைப்பிடிக்கப்படும் போர் யுக்திகளில் இருந்து மாறுபட்டது; ஆபத்து நிறைந்தது.

இந் நிலையில், இராணுவத்தினரின் இழப்பிற்குக் காரணம், இராணுவத்தினரின் திறமைக்குறைவு என்பதை விட விடுதலைப்புலிகளின் உயர்வான மனோதிடமும், சிறப்புமிக்க யுத்த தந்திரோபாயங்களுமே என்பதை அரசு புரிந்து கொள்ளவேண்டும் இதற்கு இராணுவ அதிகாரிகளை அரசு நொந்து கொள்வதாலோ அன்றி மாற்றுவதாலோ பயனேதுமில்லை. மாறாக இது வெல்ல முடியாத யுத்தம் என்பதை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முயலவேண்டும்.

---

யில் எங்கேயாவது ஒரிரு பற்றைகள் பலமான தாக்குதல் ஒன்றை நாம் மேற்கொள்ளும் போது இராணுவத்தினருக்கு துணையாக உலங்குவானூர்தி வரும் இந்த வெட்டவெளிப் பிரதேசத்தில் நிலைமை எங்களுக்குச் சாதகமாக அமை

லிருந்து வெளி வந்து கொண்டிருந்தது

இப்படியான நேரங்களில் அவரிடம் காண்பதெல்லாம் தளபதிக்கே உரிய மிடுக்கு அப்போதெல்லாம் எங்கள் மத்தியில் ஒரே ஒரு குரல்தான்

சிலர் குறிப்பிட்ட தொகை இராணுவத்தினர் திரும்பி வரவில்லை என்பது நிச்சயமாகத் தமக்குத் தெரியும் என்றும் இரவு சென்ற இராணுவத்தினரின் தொகையை விட திரும்பி வந்த இராணுவத்தினரின்

பொழுதில் றோஸ்மன் எங்களை விட்டுப்பிரிந்துவிட்டானென்ற செய்தியும் கிடைக்கின்றது. ஆயினும் அனைவரும் தீரமுடன் போராடுகின்றோம் எனது கையிலிருந்த எம்-16 லேஞ்சர் விக்டரின்

தான் உங்களுக்கு பெரிதாகத் தெரிவதாக தனிமையில் என்னிடம் உங்கள் மனக்குமுறல்களை வெளிப்படுத்தியபோது இப்போராட்டத்தில் பங்கு பற்ற எனக்கு சந்தர்ப்பம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

மத்திய அமைச்சரவையில்

## விரைவில் மாற்றங்கள் வரும் பிரதமர் ராவ் அறிவிப்பு

(டில்லி)

இந்திய மத்திய அமைச்சரவையில் விரைவில் மாற்றங்கள் கொண்டுவரப்படும் பல இலாக்காக்களின் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் இருப்பதால் அமைச்சரவையை மாற்றியமைக்க வேண்டி இருக்கிறது என்று மேற்கு வங்கத் தலைநகர் கல்கத்தாவில் செய்தியாளர்களிடையே பேசிய இந்தியப் பிரதமர் பி. வி நரசிம்மராவ் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் இடைக்காலத் தேர்தல்கள் நடத்தும் சூழ்நிலை எதுவும் தோன்றமாட்டாது என்றும் குறிப்பிட்டார் ராமஜென்மபூமி மற்றும் பாபர் மசூதி பிரச்சினைக்கு தீர்வு காண தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் நீதிமன்றம் செல்லாமலேயே இணக்கப்பாடான தீர்வொன்றைக் காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்

அத்துடன் தற்போதுசெயற்பட்டு வரும் மாநிலங்களின் அமைப்பில் மேலும் திருத்தங்கள் செய்யப்பட்டு புதிய மாநிலங்கள் தோற்றுவிக்கப்படமாட்டாது என்றும் ஜார்க்கண்ட் பிரச்சினைக்கு இணக்கத் தீர்வை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார் கல்கத்தாவில் மேற்கு வங்க முதல்வரும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவருமான ஜோதிபாசுவுடனும் பிரதமர் பேச்சுக்கள் நடத்தினார்

அயோத்தியா விவகாரத்தில் அரசின் முயற்சிக்கு ஆதரவைத் தெரிவித்த முதல்வர் ஜோதிபாசு உத்தரப்பிரதேச மாநில அரசு நீதிமன்றக் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் நரசிம்மராவிடம் கேட்டுக் கொண்டார்.

---

எல்லை தாண்டும் பேரணி

## ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி மீண்டும் ஏற்பாடுகளில் தீவிரம்

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினர் பாகிஸ்தானுடனான இந்திய எல்லைக் கோட்டைக்கடந்து ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தினுள் ஊடுருவப் போவதாக விடுத்திருக்கும் புதிய அறிவிப்புகளை அடுத்து எல்லையோரமெங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார் அவர் மேலும் கூறுகையில்; எல்லைக்கோடு தாண்டும் எந்த முயற்சியும் முழு அளவில் முறியடிக்கப்படும் என்று தெரிவித்ததுடன் இது விடயம் தொடர்பாக பாகிஸ்தான் அரசுடன்ராஜீய மட்டத்தில் பேச்சுக்கள் நடத்தப்படுமென்றும் அண்டை நாடுகளில் குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைக்கு பாகிஸ்தான் அரசு உடந்தையாக இருக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டார்.

---

அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில்

## கறுப்பின மக்களின் ஆதரவு பில்கிளின்டனுக்குகிடைக்கும்

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அதிகஆர்வம் காட்டிய கறுப்பின மக்கள்இம்முறை அதிகளவில் வாக்களிப்பில்கலந்துகொள்வார்கள் என கருதப்படுகிறது.

அவ்வாறு நடந்தால் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பில் கிளின்டனுக்கு இதனால் நன்மையேற்படும் என்றும் கருதப்படுகிறது.

கறுப்பின மக்களின் சிவில் உரிமைகள் தலைவர் ஜெஸ்ஜக்ஸன் கிளின்டனுக்கு ஆதரவான தேர்தல் பிரசாரங்களில் ஆர்வத்துடன் அண்மைக்காலத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதேவேளை ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பில்கிளின்டனுக்கு சுமார் அறுநூறு பொருளாதார நிபுணர்களின் ஆதரவும் கிடைக்கவுள்ளது. இதற்கான அங்கீகாரம் அவருக்கு வியாழனன்று கிடைத்தது.

அமெரிக்காவின் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகளை மாற்றியமைக்க பில் கிளின்டன் வைத்திருக்கும்திட்டத்திற்கு பொருளாதார நிபுணர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

### வெள்ளத்தால் உயிரிழப்பு

கேரளா மாநில தலைநகர் திருவனந்தபுரத்தில் வெள்ளப் பெருக்கினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அறுபதுக்கும் மேலாக உயர்ந்துள்ளது. மீட்பு பணிகளுக்காக இராணுவம் அழைக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து பெய்துவரும் பெருமழை காரணமாக வீதிகள் மற்றும் ரயில்வே லைன்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதால் போக்குவரத்தும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

---

## ஐக்கிய ஜேர்மனியால் அபாயம் ஏற்படலாம்

தட்சர் எச்சரிக்கை

(நியூயோர்க்)

ஜேர்மனியின் புதியசக்தி தமக்கு அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் மாஸ்ட்ரிச்ட் உடன்பாடு நசுக்கப்படாவிட்டால் பிரித்தானியா தனது பொருளாதார சுதந்திரத்தை இழந்து விடும் என முன்னாள் பிரித்தானிய பிரதமர் மார்க்ரட் தட்சர் எச்சரித்துள்ளார்.

'போர்பஸ்' சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே தட்சர் இவ்வாறுகுறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பாவில் இருக்கும் வரை ஜேர்மனி சுதந்திரமாக இருக்கும் என நான் கருதவில்லை. ஐக்கிய ஜேர்மனி குறித்து எல்லோரும் சிறிது அச்சம் கொள்ள வேண்டியுள்ளது என்றும்அவர் தெரிவித்தார்.

தட்சரின் இந்தக் கண்டனம் பிரதமர் ஜோன் மேஜருக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

---

மேகாலயாவில்

## ஒரே குடும்பத்தைச்சேர்ந்த பத்துப் பேர் படுகொலை

மேகாலயா மாநிலத்தலைநகர் சில்லாங்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பத்துப்பேர் கொலையுண்டதை அடுத்து அங்கு தற்போதைய வன்முறைக் கலவரங்களில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை பத்தொன்பதாக உயர்ந்துள்ளது கலவரத்தைக்கட்டுப்படுத்தவும் சட்டம்ஒழுங்கை நிலைநாட்டவும் ஏற்கனவே துணை இராணுவப் படைப்பிரிவுகளும், மத்திய றிசர்வ் பொலிஸ் படையும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

## நீதிமன்றத்தில் ஆஜராவேன் சபாநாயகராக அல்ல

- போட்டோ பாபுசிங்

மணிப்பூர் சட்டப் பேரவையின்சபாநாயகரான போடோ பாபு சிங் தாம் தனிநபராக நீதிமன்றத்தில் ஆஜராக தயாராக இருப்பதாகவும், ஆனால் மணிப்பூர் சட்டப் பேரவையின் சபாநாயகர் என்ற அந்தஸ்துடன் நீதிமன்றத்தில் ஆஜராவதால் சட்டப்பேரவையின் கண்ணியத்திற்கும், கௌரவத்திற்கும்பங்கம்விளைவிக்கும் என்றும் கூறியுள்ளார்

அண்மையில் மணிப்பூர் மாநிலத்தில் சில பேரவை உறுப்பினர்கள் மீது சபாநாயகர் எடுத்த ஒழுங்கு நடவடிக்கை தவறானது என்று கூறித் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் சபாநாயகரை உச்சநீதி மன்றத்தில் ஆஜராகக் கோரியிருந்தது.

நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் சபாநாயகர்கள் மாநாட்டிற்காக பஹாமாஸ் செல்லவிருந்த வேளையில் அவரது கடவுச்சீட்டு புதுடில்லியில் பறிமுதல் செய்யப்பட்டது தெரிந்ததே

---

## பேரணிமீது தாக்குதல்; 90 பாலஸ்தீனர் படுகாயம்

(றாபா)

இஸ்ரேலியச் சிறைகளில் உண்ணாவிரதம் இருக்கும் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக காஸாப்பகுதியில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றின்மீது இஸ்ரேலியப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது சுமார் 90 பாலஸ்தீனியர்வரை படுகாயமடைந்துள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு அப்பால் கூடிய பல்லாயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிசார் துப்பாக்கி ரவைகள், பிளாஸ்டிக் ரவைகள், கண்ணீர்ப் புகைக்குண்டுகள் என்பவற்றை பிரயோகித்தனர்.

தலையில்காயப்பட்டபாலஸ்தீனியர் ஒருவர் உயிரிழந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கூறின.

ஈழநாதம்

# இந்தியாவில் அகதி வாழ்க்கை; இங்கும் அதுவே தொடர்கிறது

## - தமிழகத்திலிருந்து வந்தவர் கவலை

''தமிழ் நாட்டில் அகதி முகாமில் வருடக்கணக்காக வாழ்க்கை நடத்தினோம். திருமலையிலும் அகதிகளாகவே தங்கியிருந்தோம். இறுதியில் மீண்டும் அகதி முகாமுக்கே வந்து சேர்ந்திருக்கிறோம் அகதி வாழ்வு எம்மைத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது'.

இவ்வாறு சொறிக்கல்முனை அகதி முகாமுக்குச் சென்ற ஒருவர் துயரத்துடன் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் தங்கியிருந்து திருக்கோணமலையை வந்தடைந்த அகதிகளில் சுமார் 35 பேர் கடந்த புதனன்று இரவு மட்டக்களப்பு வந்து சேர்ந்தனர். இவர்கள் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

மேற்படி அகதிகளில் சொற்ப தொகையினரே மீண்டும் தத்தமது இடங்களுக்குச் சென்றனர் என்றும், பெரும்பாலானவர்கள் சொறிக்கல் முனை அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு செயலகத்திற்கோ அல்லது செயலகத்தின் கீழ் கடமை புரியும் அதிகாரிகளுக்கோ முன்னறிவித்தல் கொடுக்கப்படாமல் திருமலையில் இருந்து இந்த அகதிகள் திடீரென அனுப்பி வைக்கப்பட்டதாகவும்,

இதன் காரணமாக மேற்படி குடும்பங்களை எங்கே தங்க வைப்பது என்று திட்டமிட முடியாமல் போய் விட்டதாகவும் அதிகாரி ஒருவர் குறை தெரிவித்தார்

உடன்

குறித்து ஏதாவது செய்ய வேண்டும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரசுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டு வருகிறது.

எனவே ஜனாதிபதி பிரேமதாசா படையினரையும் போரையும் கூட்டுப்படைத் தலைமையகத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசா ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் கூட்டுப்படைத் தலைமையகத்திடமிருந்து அதிகாரங்களை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் ஆகியவற்றின் தனித்தனி தளபதிகளின் கைகளுக்கு மாற்றியதும் குறிப்பிடத்தக்கது,

ஆனால் கடந்த ஆகஸ்ட் மாதம் படையினரின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த வடபகுதி தளபதி புலிகளின் நிலக்கண்ணியில் கொல்லப்பட்

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வஸ்தியாம்பிள்ளை
எதிர்மன்னசிங்கம்

மலர்வு 1963-12-04 அழிப்பு 1991-10-12



அமரர்
யேசுதாசன்
போல்ராஜ்

மலர்வு 1970-08-15 அழிப்பு 1991-10-12

கடல் தன்னில் தொழில் புரிய கடும் புயல் பாராமல்
திடங்கொண்ட மனதுடனே பாய்விரித்த தோணியும்
தயங்காமல் மறுப்பின்றி காலனிடம் கையளிக்க எமனாக
கிளாலிக் கடலதிலே கிழித்துக்கொண்டு சென்றது.
வட்டமிட்ட வானூர்தி கொடூரமாய் கொன்றதுவே
கதறி அழுகின்றோம் கண்ணீரால் அஞ்சலி செய்கின்றோம்

(3345) கிளாலி கடற்றொழிலாளர் சங்கம்

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



# பாலர் பாடசாலை விளையாட்டு விழா

லெப். செல்லக்கிளி அம்மான் பாலர் பாடசாலையின் ஒரு வருட நிறைவை முன்னிட்டு இன்று பிற்பகல் 2 00 மணிக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டி நிகழ்வுகளின் போது விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள் கலந்துகொள்ள உள்ளனர். பிரதம விருந்தினராக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு.மகாலிங்கம் அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார்.

போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெறும் மாணவர்களுக்கு முதலாம் பரிசாக லெப் செல்லக்கிளி அம்மான் ஞாபகார்த்தப் பரிசும் இரண்டாம் பரிசாக லெப். கேணல் சரா ஞாபகார்த்தப் பரிசும், மூன்றாம் பரிசாக மேஜர் அழகன் (ஈழநாதம்) ஞாபகார்த்த பரிசும் வழங்கப்படவுள்ளது.

கட்சித்

அதேசமயம் அனுராவை சிறிமாவுக்கு பதிலாக ஏனைய எதிர்க்கட்சிகள் ஏற்குமா என்பது சந்தேகமே எனவும் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

சர்வதேச

னெஸ்டி இன்டர் நாஷனல் கருத்து வெளியிட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

2ம் லெப்

வடமராட்சி மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தலைமையில் அவ்வைபவம் நடைபெற்றது.

பிரபாகரனே

தான் முடியும் சிங்கள அரசு படுகொலை செய்யும் தமிழர்களின் நலனுக்காக பாட்டாளி மக்கள்கட்சி போராடுவதை யாராலும் தடுக்கமுடியாது. தமிழர்கள் எங்கிருந்தாலும், அவர்கள் உரிமைக்காகப் போராடுவோம். அதில்தேவையென்றால் தூக்குமேடையைச் சந்திக்கவும் தயார். பிரபாகரனை பகிரங்கமாக ஆதரிக்கின்றேன் என்னைத் தமிழக அரசு கைதுசெய்து விளைவுகளைச் சந்திக்கட்டும் என்றும் தெரிவித்தார்.

# 45-ம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்: 30 – 06 – 1970

அநியாய அழிப்பு 29 – 08 – 1992

(29-08-92) அன்று மானிப்பாய் சந்தையடியில் வைத்து திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட

## பாக்கியதுரை உதயகுமார் (உதயன்)

(முன்னாள் தமிழீழ காவல்துறையின் நகரப் போக்கு வரத்துப் பிரிவில் கடமையாற்றியவர்)

பால்முகம் மாறாத நின் முகத்தை
பார்த்தபின்பும்
பாதகர்கள் படுகொலை செய்தனரோ
ஐயா!
நீ திரிந்த தேசம் இப்போ......

இடநெருக்கடியை நீக்க

# வன்னிப் பாடசாலைகளில் தற்காலிக கொட்டில்கள்

வவுனியா மாவட்டத்தில் சுமார் ஐம்பது பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டில்கள்அமைப்பதற்காக வவுனியா கல்வித்திணைக்களம் பணம் ஒதுக்கீடு செய்துள்ளது.

ஒவ்வொரு கொத்தணி அதிபர்கள் ஊடாக இவ்வறிவித்தலை கல்வித்திணைக்களம் விடுத்துள்ளது

சமீபகால இராணுவ நடவடிக்கைகளினாலும், விமானக்குண்டு வீச்சுக்களினாலும் ஏராளமான பாடசாலைகள் சேதமடைந்து காணப்படுகின்றமை தெரிந்ததே. இங்கு கல்விபயிலும் மாணவர்களின் இருப்பிட வசதியீனத்தைப் போக்கவே வவுனியா கல்வித்திணைக்களம் இந் நடவடிக்கையை எடுத்துள்ளது.

நாற்பது அடி நீளத்திலும், பதினைந்து அடி அகலத்திலும் இக்கொட்டில்கள் அமைக்கப்படுமாம். ஒவ்வொரு கொட்டில்களுக்கும் பத்தொன்பதினாயிரத்து ஐம்பது ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டது (தி)

பாடசாலை

விதிக்கப்பட்டுள்ளது.

பென்சில் சீவும் கட்டர் துப்பாக்கி வடிவமாக செய்யப்பட்டிருப்பதும் கலர்சோக்கில் மெழுகு கலந்திருப்பதுமே தடைக்குரிய காரணம் என்று கூறப்படுகிறது. (க)

# மரண அறிவித்தல்



## திரு. திருச்செல்வம் மேரி யோசேப்

[ தோட்டத்துச் செல்லத்துரை ]

''றீற்றா பவனம்'' சங்கானை வீதி, அச்சுவேலியைச் சேர்ந்த திருச்செல்வம் மேரி யோசேப் என்பவர் 10 - 10 -92 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலம் சென்ற திருச்செல்வத்தினதும் திருமதி. ஆசீர்வாதம்மா திருச்செல்வத்தினதும் சிரேஷ்ட புதல்வனும், றீட்டா வயலற்றின் அன்புக் கணவருமாவார்.

இவர் அன்ரன் எவரெஸ்ட் (பிரான்ஸ்), அலோசியஸ் எவரெஸ்ட் (பிரான்ஸ்), மேரிசவுந்தரி (பிரான்ஸ்), மேரி அனிற்றா (கனடா), அன்றூ எவரெஸ்ட் (அவுஸ்திரேலியா) மேரி அஜந்தாராணி (கனடா), அலெக்ஸ் எவெரெஸ்ட் (மாணவன், அச்சுவேலி மகா வித்தியாலயம்), மேரி ஆன் சந்திரிகா (மாணவி, அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி), அஜந்தன் எவரெஸ்ட் (மாணவன் அச்சுவேலி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும்

வயலற் யோசேப்பின் (பிரான்ஸ்), மரியதாஸ் (பிரான்ஸ்), அனிற்றா (பிரான்ஸ்) பயஸ் (கனடா), போல்ராஜ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும்

கௌதமன், கலைவாணி, அருண், சீத்தா, சுஜித்தா, சமன்தா, ஜெனதன், வயலற்றீற்றா, அஜித், ஸ்ரீபன்,

அமரர்
வஸ்தியாம்பிள்ளை
எதிர்மன்னசிங்கம்

மலர்வு 1963-12-04
அழிப்பு 1991-10-12

அமரர்
யேசுதாசன்
போல்ராஜ்

மலர்வு 1970-08-15
அழிப்பு 1991-10-12

கடல் தன்னில் தொழில் புரிய கடும் புயல் பாராமல்
திடங்கொண்ட மனதுடனே பாய்விரித்த தோணியும்
தயங்காமல் மறுப்பின்றி காலனிடம் கையளிக்க எமனாக
கிளாலிக் கடலதிலே கிழித்துக்கொண்டு சென்றது.
வட்டமிட்ட வானூர்தி கொடூரமாய் கொன்றதுவே
கதறி அழுகின்றோம் கண்ணீரால் அஞ்சலி செய்கின்றோம்

(3345) கிளாலி கடற்றொழிலாளர் சங்கம்

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



மன்னார் மாவட்டத்தளபதியும்
இயக்க மத்திய குழு உறுப்பினருமான

## லெப்.கேணல் விக்டர் ஒஸ்கா
(மருசலீன் பியூஸ்லஸ்)

வீரஜனனம் 24-11-1963
வீரச்சாவு 12-10-1986

மன்னார் மாவட்ட தளபதியே
மாவீரர் காவியத்தின் நாயகனான் - விக்டர்
மண்ணிலும் விண்ணிலும் நீ சிரிப்பாயே
மனம் தளரா மாவீரன் நீ — மண்ணில்
ஏந்திய ஆயுதம் எத்தனை பகைவனை வீழ்த்தியதோ
கணக்கிட முடியாது உன் வீரமே
மறைந்தாலும் நீ — மறப்போமா நாம்.

(சி/5208) உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

கப்பட வேண்டும் என அரசுக்கு நெருக்கடி கொடுக்கப் பட்டு வருகிறது.

எனவே ஜனாதிபதி பிரேமதாசா படையினரையும் போரையும் கூட்டுப்படைத் தலைமையகத்தின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவர தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசா ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் கூட்டுப்படைத் தலைமையகத் திடமிருந்து அதிகாரங்களை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் ஆகியவற்றின் தனித்தனி தளபதிகளின் கைகளுக்கு மாற் றியதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் கடந்த ஆகஸ்ட் மாதம் படையினரின் நம் பிக்கை நட்சத்திரமாக இருந்த வடபகுதி தளபதி புலிகளின் நிலக்கண்ணியில் கொல்லப்பட் டது இராணுவத்தினருக்குபே ரிடியாகஇருந்துவந்தது. அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து புலிகள் இராணுவத்தினர் மீது மேலும் பல தாக்குதல்களைத் தொடுத்தனர்.

இராணுவத்தினர் சோர் வடைந்திருப்பதாகவும் இரா ணுவத்தை விட்டு பலர் ஓடுவ தாகவும் செய்திகள் வெளிவந் துள்ளன. இவ்வாறு அக்கண் ணோட்டத்தில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

## இப்பில்

மாவட்டமாகும். அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசமும் இவ்வாறானதே.

இம் மாவட்டங்களில் சில பகுதிகளைவிட ஏனைய பகுதி கள் தென்னை, பலா, மா, தோடை, கமுகு போன்றபயன் தரும் மரங்களும் மருதை, வம்பி, ஆல், அரசு, வாகை போன்ற மரங்களும் நிறைந்து காணப்பட்ட பகுதிகளாகும்.

இவ்வாறு குளிர்ச்சியான மருத நிலங்களைக்கொண்ட இம்மாவட்டங்களில் இவ்வரு டம் ஏற்பட்ட கடும் வரட்சி யால் மக்கள் குடிநீருக்கு அவ திப்படும் நிலை ஏற்பட்டிருக் கிறது. நிலத்திலுள்ள நீரை மிகமோசமாக உறிஞ்சியும் ஏனைய மரங்களை வளரவிடாது பட்டுப்போக வைக்கும் தன்மையையும் கொண்ட ''றொக்ஸ்'' இப்பில் இப்பில் போன்ற மரங்களே இந்த நிலைமைக்குக் காரண மாகும் என்றும் அவர் தெரி வித்தார்.

## லெப் கேணல்

கிடைத்ததற்காக அதுவும் உங்களுடன் பழக்கம் கிடைத் ததற்காக நான் பெருமை யடைகிறேன் விக்டர்! இந்த ஜனவரி 17 ஆம் திகதி நீங்கள் எங்களுடன் இருக்கமாட்டீர் கள். ஆனால் உங்கள் உணர் வுகள் எங்களை பல்லாயிரம் விக்டர்களாக உருவாக்குகின் றன. விக்டர் உங்களுக்கு என் அன்பு முத்தங்கள்.

நன்றி ஈழமுரசு



— —
1970 1992

(29-08-92) அன்று மானிப்பாய் சந்தையடியில் வைத்து திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட

## பாக்கியதுரை உதயகுமார்
## (உதயன்)

(முன்னாள் தமிழீழ காவல்துறையின் நகரப் போக்கு வரத்துப் பிரிவில் கடமையாற்றியவர்)

பால்முகம் மாறாத நின் முகத்தை
பார்த்தபின்பும்
பாதகர்கள் படுகொலை செய்தனரோ
ஐயா!
நீ திரிந்த தேசம் இப்போ........
உனையிழந்து தவிக்கிறது
உன் உடன்பிறப்புகளோ.........
தேற்றுவாரின்றி தேம்புகின்றனர்
தர்மத்தை காக்கும் தமிழீழ அன்னையவள்
உனைக் கொன்ற அதர்மத்தைத்
துடைத்தெறிவாள் என்று அமைதியடைகிறோம்.

இன்று 12-10-92 இல் நிகழும் வீட்டுகிரித்தியங்களிலும் மதியபோசனத்திலும் நண்பர்களையும், சுற்றத்தாரையும் கலந்து கொள்ளுமாறு கேட டுக்கொள்கிறோம்.

156, பொன்னாலை வீதி,
கட்டுடை, மானிப்பாய். -குடும்பத்தினர்,

(5213)

நெஞ்சில் நிறைந்தவனின்

## 90 ஆம் நாள்

# நினைவு அஞ்சலி



வீரப்பிறப்பு: 28 — 04 — 1973
வீரச்சாவு 14 — 07 — 1992

## கப்டன் சாதனன் (மாதா)

''நேசத்தாய் மடியினிலே நீ உறங்கு கண்ணே-எம்
நெஞ்சுகளோ நிமிருதடா நினை எண்ணும் போது-நீ
நேசித்த விடுதலையை நிச்சயமாய் காண்போம்-அது
நிறைவேறும் விண்ணிருந்துன் தோழருடன் மகிழு''

ரப்பியஸ் அந்தோனிராசா, குடும்பத்தினர்,
தொட்டியடி வீதி
விசுவமடு, முல்லைத்திவு. 3453

''நீற்றா பவனம்'' சங்கானை வீதி, அச்சுவேலியைச் சேர்ந்த திருச்செல்வம் மேரி யோசேப் என்பவர் 10 - 10 -92 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலம் சென்ற திருச்செல்வத்தினதும் திருமதி. ஆசீர்வாதம்மா திருச்செல்வத்தினதும் சிரேஷ்ட புதல்வனும், றீட்டா வயலற்றின் அன்புக் கணவருமாவார்.

இவர் அன்ரன் எவரெஸ்ட் (பிரான்ஸ்), அலோசியஸ் எவரெஸ்ட் (பிரான்ஸ்). மேரிசவுந்தரி (பிரான்ஸ்). மேரி அனிற்றா (கனடா), அன்றூ எவரெஸ்ட் (அவுஸ்திரேலியா) மேரி அஜந்தாராணி (கனடா), அலெக்ஸ் எவரெஸ்ட் (மாணவன், அச்சுவேலி மகா வித்தியாலயம்), மேரி ஆன் சந்திரிகா (மாணவி, அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி), அஜந்தன் எவரெஸ்ட் (மாணவன் அச்சுவேலி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும்

வயலற் யோசேப்பின் (பிரான்ஸ்), மரியதாஸ் (பிரான்ஸ்), அனிற்றா (பிரான்ஸ்) பயஸ் (கனடா), போல்ராஜ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌதமன், கலைவாணி, அருண், சீத்தா, சுஜித்தா, சமன்தா, ஜெனதன், வயலற்றீற்றா, அஜித், ஸ்ரீபன், மாஸ்ரர் பயஸ் ஆகியோரின் அன்புப் பேரனும்

மரியம்மா (பிரான்ஸ்), அக்னஸ், இம்மானுவல் (முன்னாள் இலங்கை இராணுவம்), யோசேப்பின் (நீர் கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும்

காலஞ் சென்ற மனுவேற்பிள்ளை (பொலிஸ் உத்தியோகத்தர்), காலஞ் சென்ற கென்றி யோசேப் (இந்திய இராணுவம்), காலஞ் சென்ற மரியதாஸ் [திருமலை துறைமுகக்கூட்டுத்தாபனம்), ஸ்கொலஸ்ரிக்கா, பவளம், அரியராசா, சின்னத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்,

இவர்புத்தூர்கமநலசேவை நிலையதலைவராகவும், அச்சுவேலி மேற்கு செஞ்சிலுவைச் சங்கத் தலைவராகவும், அச்சுவேலி சுகாதாரக்குழு தலைவராகவும், அச்சுவேலி வளர்மதி ஐக்கிய நாணய சங்கத் தலைவராகவும், கோப்பாய் பிரிவு செஞ்சிலுவைச்சங்க இயக்குனர் மன்ற உறுப்பினராகவும் இன்னும் பலசமூக ஸ்தாபனங்களில் முன்னணித் தொண்டராக இருந்த சமூக சேவையாளர் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12 - 10 - 92) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அச்சுவேலி சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படிக்கு
தகவலாளர் :
மனைவி, பிள்ளைகள், ஞா. அல்பேட்
அச்சுவேலி
(3451)

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 11-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6064

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:
24-5454, 24-6972, 24-9987, 26-1658, 27-5187, 24-336, 26-3139, 28-2342, 28-1020, 41-4129, 26-2108, 27-1072, 26-5725, 27-493, 24-4917, 41-1227, 26-5071, 27-5217, 27-9033, 27-9779, 26-1741, 24-4747, 27-8959, 41-9995, 27-7081, 26-5760, 41-9437, 28-4183, 24-4550

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்
26-3652, 28-4672, 28-1308, 27-7537, 26-5143, 41-5583, 41-1462, 24-9676, 24-6699, 22-4473, 42-3239, 27-5140, 27-5197, 24-6431